உலவா விருங்கழிச் சேர்ப்ப யார்மாட்டுங் ❋
கலவாமை கோடி யுறும். (௮)

கல்லாது போகிய நாளும் பெரியவர்கட் ❋
செல்லாது வைகிய வைகலு மொல்வ ❋
கொடாஅ தொழிந்த பகலு முரைப்பிற் ❋
படாஅவாம் பண்புடையார் கண். (௯)

பெரியார் பெருமை சிறுதகைமை யொன்றிற் ❋
குரியா ருரிமை யடக்கந் தெரியுங்கால் ❋
செல்வ முடையாருஞ் செல்வரே தற்சேர்ந்தார் ❋
அல்லல் களைப வெனின். (௰)

பெரியாரைப்பிழையாமை முற்றிற்று — ஆக ௱௭௰.

அறியாப்பருவத்தடங்காரோடொன்றி, ✻
நெறியல்லசெய்தொழுகியவ்வுநெறியறிந்த ✻
நற்சார்வுசாரக்கெடுமேவெயின்முறுகப் ✻
புற்பனிப்பற்றுவிட்டாங்கு. (௧)

அறிமினறநெறியஞ்சுமின்கூற்றம் ✻
பொறுமின்பிறர்கடுஞ்சொற்போற்றுமின்வஞ்சம் ✻
வெறுமின்வினைதீயார்கேண்மையெஞ்ஞான்றும் ✻
பெறுமின்பெரியார்வாய்ச்சொல். (௨)

அடைந்தார்ப்பிரிவுமரும்பிணியுங்கேடும் ✻
உடங்குடம்புகொண்டார்க்குறலாற்றொடங்கிப் ✻
பிறப்பின்னாதென்றுணரும்பேரறிவினாரை ✻
உறப்புணர்கவம்மாவென்னெஞ்சு. (௩)

இறப்பநினையுங்காலின்னாதெனினும் ✻
பிறப்பினையாருமுனியார்பிறப்பினுள் ✻
பண்பாற்றுநெஞ்சத்தவர்களோடெஞ்ஞான்றும் ✻
நண்பாற்றிநட்கப்பெறின். (௪)

ஊரங்கணநீருரவுநீர்ச்சேர்ந்தக்கால் ✻
பேரும்பிறிதாகித்தீர்த்தமாமோரும் ✻
குலமாட்சியில்லாருங்குன்றுபோனிற்பர் ✻
நலமாட்சிநல்லாரைச்சார்ந்து. (௫)

ஒண்கதிர்வாண்மதியஞ்சேர்தலாலோங்கிய
அங்கண்விசும்பின்முயலுந்தொழப்படூஉங்
குன்றியசீர்மையராயினுஞ்சீர்பெறுவர்
குன்றன்னார்கேண்மைகொளின். (௬)

பாலோடளாயநீர்பாலாகுமல்லது
நீராய்நிறந்தெரிந்துதோன்றாதாந்தேரில்
சிறியார்சிறுமையுந்தோன்றாதாநல்ல
பெரியார்பெருமையைச்சார்ந்து. (௭)

கொல்லையிரும்புனத்துக்குற்றியடைந்தபுல்
ஒல்காவேயாகுமுழவருழாப்படைக்கு
மெல்லியரோயாயினுநற்சார்வுசார்ந்தார்மேல்
செல்லாவாஞ்செற்றார்சினம். (௮)

நிலநலத்தானந்தியநெல்லேபோற்றந்தம்
குலநலத்தாலாகுவர்சான்றோர்கலநலத்தைத்
தீவளிசென்றுசிதைத்தாங்குச்சான்றாண்மை
தீயினஞ்சேரக்கெடும். (௯)

மனத்தான்மறுவிலரேனுந்தாஞ்சேர்ந்த
இனத்தாலிகழப்படுவர்புனத்து
வெறிகமழ்சந்தனமும்வேங்கையும்வேமே
எறிபுனந்தீப்பட்டக்கால். (௰)

நல்லினஞ்சேர்தன்முற்றிற்று. ௱௮௰.

ஈதலிசையா திளமைசேணீங்குதலால் ✻
காதலவருங் கருத்தல்லர் காதலித் ✻
தாதுநாமென்னுமவாவினைக்கைவிட்டுப் ✻
போவதேபோலும்பொருள். (௧)

இற்சார்வினைமாத்தேமீங்கமைந்தேமென்றெண்ணிப்
பொச்சாந்தொழுகுவர்பேதையாரச்சார்வு
நின்றனபோன்றுநிலையாவெனவுணர்ந்தார் ✻
என்றும்பரிவதிலர். (௨)

மறுமைக்குவித்துமயலின்றிச்செய்து ✻
சிறுமைப்படாதேநீர்வாழ்மினறிஞராய் ✻
நின்றுழிநின்றேநிறம்வேறுங்காரணம் ✻
இன்றிப்பலவுமுள. (௩)

உறைப்பருங்காலைத்தூற்றுநீர்க்கேணி ✻
இறைத்துணினூறுமாற்றுமென்பீர்கொடைக்கடனும்
சாஅஅயக்கண்ணும்பெரியார்போன்மற்றையார் ✻
ஆஅஅயக்கண்ணுமரிது. (௪)

உறுபுனறந்துலகூட்டியறுமிடத்தும் ✻
கல்லூற்றுழியூறுமாறேபோற்செல்வம் ✻
பலர்க்காற்றிக்கெட்டுலர்ந்தக்கண்ணுஞ் சிலர்க்காற்றிச்
செய்வர்செயற்பாலவை. (௫)

பெருவனை நாட பெரியார்கட் டுடைமை ✳
கருநனா மேற்கூடே போற்றோன்றுங் கருநரைக் ✳
கொண்றன்ன வில்ஞெ செயினுஞ் சிறியார்மேல் ✳
ஒன்றுனுந் தோன்றா கெடும். (௬)

இசைந்த சிறுமையியல்பிலாதார்கட் ✳
பசைந்த துணையும் பரிவாமசைந்த ✳
நசையேயும் வேண்டாத நல்லறிவினோர்கட் ✳
பசையேயும் பாடுபெறும். (௭)

மெல்லிய நல்லாருண் மேன்மை யதுவிறந் ✳
தொன்னெருட் கூற்றுட் குமுட் குடைமையெல்லாம் ✳
சலவருட் சாலச்சலமே நலவருள் ✳
நன்மையவதம் பாய்விடல். (௮)

கடுக்கியொருவன் கடுங்குறளை பேசி ✳
மயக்கிவிடினும் மறப்பிரப்பொன்றின்றித் ✳
துளக்கமிலாதவர் தூயமனத்தார் ✳
விளக்கினுள் ஒண்சுடரே போன்று. (௯)

முற்றுத் துறந்து தினை நாளுமறஞ்செய்து ✳
பிற்றுக் துக் துவர்சான் றவரத்தித்து ✳
முக்குற்ற நீக்கி முடியுமவையெல்லாம் ✳
துக்கத் துணிக்கிவிடும். (௰)

பெருமை முற்றிற்று — ஆக ௱௰.

கோளாற்றக் கொள்ளாக் குளத்தின்கீழ்ப் பைங்கூழ்போல்
கேளீவ துண்டு கிளைகளோ துஞ்சுவ
வாளாடு கூத்தியர் கண்போற் றடுமாறும்
தாளாளர்க் குண்டோ தவறு. (௧)

ஆடுகோ டாகி யதரிடை நின்றதூஉம்
காழ்கொண்ட கண்ணே களிறணைக்குங் கந்தாகும்
வாழ்தலு மன்ன தகைத்தே யொருவன்றான்
தாழ்வின்றித் தன்னைச் செயின். (௨)

உறுபுலி யூணிரை யின்றி யொருநாள்
சிறுதேரை பற்றியுந் தின்னு மறிவினால்
காற்றொழி லென்று கருதற்க கையினால்
மேற்றொழிலு மாங்கே மிகும். (௩)

இசையா தெனினு மியற்றியோ ராற்றால்
அசையா துநிற்பதா மாண்மை யிசையுங்கால்
கண்டற் றிரையலைக்குங் கானலந் தண்சேர்ப்ப
பெண்டிரும் வாழாரோ மற்று. (௪)

நல்லகுல மென்றுந் தீயகுல மென்றும்
சொல்லள வல்லாற் பொருளில்லைத் தொல்சிறப்பின்
ஒண்பொருளொன் றோ தவங்கல்வி யாள்வினை
என்றிவற்றா னாகுங் குலம். (௫)

ஆற்றுந் துணையுமறிவினையுள்ளடக்கி *
ஊக்க முரையா ருணர்வுடையா ரூக்கம் *
உறுப்பினா லாராயு மொண்மை யுடையார் *
குறிப்பின்கீழ்ப் பட்ட துலகு. (௬)

சிதலைதினப்பட்ட வாலமரத்தை *
மதலையாய் மற்றதன் வீழூன்றி யாங்குக் *
குதலைமை தந்தைகட் டோன்றிற்றான் பெற்ற *
புதல்வன் மறைப்பக் கெடும். (௭)

ஈனமா யில்லிருந் தின்றி விளியினும் *
மானந் தலைவருவ செய்பவோ யானை *
வரிமுகம் புண்படுக்கும் வள்ளுகிர் நோன்றாள் *
அரிமா மதுகையவர். (௮)

திங்கரும் பீன்ற திரள்கா லுளையலரி *
தேங்கமழ் நாற்ற மிழந்தாஅங் கோங்கும் *
உயர்குடியுட் பிறப்பி னென்னாம் பெயர் பொறிக்கும்
பேராண்மை யில்லாக் கடை. [illegible]-[illegible]-36 (௯)

பெருமுத் தரையர் பெரிதுவந் தீயும் *
கருனைச்சோ றார்வர் கயவர் கருனையைப் *
பேருமறியார் நனிவிரும்பு தாளாண்மை *
நீருமமிழ் தாய்விடும். [illegible]-8-37 (௰)

தாளாண்மை முற்றிற்று—அக உா.

வயாவும்வருத்தமுமீன்றக்கானோவும் ✻
கவாஅன்மகற்கண்டுதாய்மறந்தாஅங் ✻
கசாஅத்தானுற்றவருத்தமுசாஅத்தன் ✻
கேளிரைக்காணக்கெடும். (௧)

அழன்மண்டுபோழ்தினடைந்தவர்கட்கெல்லாம் ✻
நிழன்மரம்போனேரொப்பத்தாங்கிப்பழுமரம்போ ✻
பல்லார்பயன்றுய்ப்பத்தான்வருந்திவாழ்வதே [ல்
நல்லாண்மகற்குக்கடன். (௨)

அடுக்கன்மலைநாடதற்சேர்ந்தவரை ✻
எடுக்கலமென்னார்பெரியோரடுத்தடுத்து ✻
வன்காய்பலபலகாய்ப்பினுமில்லையே ✻
தன்காய்பொறுக்கலாக்கொம்பு. (௩)

உலகறியத்தீரக்கலப்பினுநில்லா ✻
சிலபகலாஞ்சிற்றினத்தார்கேண்மைநிலைதிரியா ✻
நிற்கும்பெரியோர்நெறியடையநின்றனைத்தால் ✻
ஒற்கமிலாளர்தொடர்பு. (௪)

இன்னரினையரெமர்பிறரென்னுஞ்சொல் ✻
என்னுமிலராமியல்பினாற்றுன்னித் ✻
தொலைமக்கடுன்பந்தீர்ப்பாரேயார்மாட்டும் ✻
தலைமக்களாகற்பாலார். (௫)

பொற்கலத்துப்பெய்தபுலியுகிர்வான்புழுக்கல் *
அக்காரம்பாலோடமரார்கைத்துண்டலின் *
உப்பிலிப்புற்கையுயிர்போற்கிளைஞர்மாட் *
டெக்கலத்தானுமினிது. (௬)

நாள்வாய்ப்பெறினுந்தன்னள்ளாதாரில்லத்து *
வேளாண்மைவெங்கருனைவேம்பாகுங்கேளாய் *
அபராநட்போழ்தினடகிடுவரேனும் *
தமராயார்மாட்டேயினிது. (௭)

முட்டிகைபோலமுனியாதுவைகலும் *
கொட்டியுண்பாருங்குறடுபோற்கைவிடுவர் *
சுட்டுக்கோல்போலவெரியும்புகுவரே *
நட்டாரெனப்படுவார். (௮)

நறுமலர்த்தண்கோதாய்நட்டார்க்குநட்டார் *
மறுமையுஞ்செய்வதொன்றுண்டோவிறுமளவும் *
இன்புறுவதின்புற்றெழீஇயவரொடு *
துன்புறுவதுன்புறுக்கால். (௯)

விருப்பிலாரில்லத்துவேறிருந்துண்ணும் *
வெருக்குக்கண்வெங்கருனைவேம்பாம்விருப்புடைத்
தன்போல்வாரில்லுட்டயங்குநீர்த்தண்புற்கை *
என்போடியைந்தவமிழ்து. (௰)

சுற்றந்தழால்-முற்றிற்று—ஆக உ௱௰.

கருத்துணர்ந்துகற்றறிந்தார்கேண்மையெஞ்ஞான்று[ம்
குருத்திற்கரும்புதின்றற்றேகுருத்திற்
கெதிர்செலத்தின்றன்னதகைத்தரோவென்று ※
மதுரமிலாளர்தொடர்பு. (க)

இற்பிறப்பெண்ணியிடைதிரியாரென்பதோர் ※
நற்புடைக்கொண்டமையல்லதுபொற்கேழ் ※
புனலொழுகப்புள்ளிரியும்பூங்குன்றநாட ※
மனமறியப்பட்டதொன்றன்று. (உ)

யானையனையவர்நண்பொரீஇநாயனையார் ※
கேண்மைகெழீஇக்கொளல்வேண்டும்யானை ※
அறிந்தறிந்தும்பாகனையேகொல்லுமெறிந்தவேல் ※
மெய்யதாவால்குழைக்குநாய். (௩)

பலநாளும்பக்கத்தாராயினுநெஞ்சில் ※
சிலநாளுமொட்டாரோடொட்டார்பலநாளும் ※
நீத்தாரெனக்கைவிடலுண்டோதந்நெஞ்சத் ※
தியாத்தாரோடியாத்ததொடர்பு. (௪)

கோட்டுப்பூப்போலமலர்ந்துபிற்கூம்பாது ※
வேட்டதேவேட்டதாநட்பாட்சிதோட்ட ※
கயப்பூப்போன்முன்மலர்ந்துபிற்கூம்புவாரை ※
நயப்பாருநட்பாருமில். (௫)

கடையாயார்நட்பிற்கமுகனையரேனை ✻
இடையாயார்தெங்கினனையர்தலையாயார் ✻
எண்ணரும்பெண்ணைபோன்றிட்டஞான்றிட்டதே ✻
தொன்மையுடையார்தொடர்பு. (௬)

கழுநீருட்காரடகேனுமொருவன் ✻
விழுமிதாக்கொள்ளினமிழ்தாம்விழுமிய ✻
குய்த்துவையார்வெண்சோறேயாயினுமேவாதார் ✻
கைத்துண்டல்காஞ்சிரங்காய். (௭)

நாய்க்காற்சிறுவிரல்போனன்கணியாராயினும் ✻
ஈக்காற்றுணையுமுதவாதார்நட்பென்னாம் [க்கும்
சேய்த்தானுஞ்சென்று கொளல்வேண்டுஞ்செய்விளை
வாய்க்காலனையார்தொடர்பு. (௮)

தெளிவிலார்நட்பிற்பகைநன்றுசாதல் ✻
விளியாவருநோயினன்றாலளிய ✻
விகழ்தலிற்கோறலினிதேமற்றில்ல ✻
புகழ்தலின்வைதலேநன்று. (௯)

மரீஇப்பலரோடுபன்னாண்முயங்கிப் ✻
பொரீஇப்பொருட்டக்கார்க்கோடலேவேண்டும் ✻
பரீஇயுயிர்செகுக்கும்பாம்பொடுமின்னா ✻
மரீஇப்பின்னைப்பிரிவு. (௰)

நட்பாராய்தல் - முற்றிற்று — ஆ_ உ௱உ௰.

நல்லாரெனத்தானனிவிரும்பிக்கொண்டாரை *
அல்லாரெனினுமடக்கிக்கொளல்வேண்டும் *
நெல்லுக்குமியுண்டுநீர்க்குநுரையுண்டு *
புல்லிதழ்பூவிற்குமுண்டு. (௧)

செறுத்தோறுடைப்பினுஞ்செம்புனலோடூடார் *
மறுத்துஞ்சிறைசெய்வர்நீர்நசைவாழ்நர் *
வெறுப்பவெறுப்பச்செயினும்பொறுப்பரே *
தாம்வேண்டிக்கொண்டார்தொடர்பு. (௨)

இறப்பவேதீயசெயினுந்தன்னட்டார் *
பொறுத்தறகுவதொன்றன்றோநிறக்கோங் *
குருவவண்டார்க்குமுயர்வரைநாட *
ஒருவர்பொறையிருவர்நட்பு. (௩)

மடிதிரைதந்திட்டவான்கதிர்முத்தம் *
கடிவிசைநாவாய்க்கரையலைக்குஞ்சேர்ப்ப *
விடுதற்கரியாரியல்பிலரேனெஞ்சம் *
சுடுதற்குமூட்டியதீ. (௪)

இன்னாசெயினும்விடற்பாலரல்லாரைப் *
பொன்னாகப் போற்றிக் கொளல்வேண்டும் பொன்
நல்லிற்சிதைத்ததீநாடொறுநாடித்தம் [னொடு
இல்லத்திலாக்குதலால். (௫)

இன்னாசெயினும்விடுதற்கரியாரைத் ✳
துன்னாத்துறத்தறகுவதோ துன்னருஞ்சீர் ✳
விண்குத்துநீள்வரைவெற்பகளைபவோ ✳
கண்குத்திற்றென்றுதங்கை. (௬)

இலங்குநீர்த்தண்சேர்ப்பவின்னாசெயினும் ✳
கலந்துபழிகாணார்சான்றோர்கலந்தபின் ✳
றீமையெடுத்துரைக்குந்திண்ணறிவில்லாதார் ✳
தாமுமவரிற்கடை. (௭)

ஏதிலார்செய்ததிறப்பவேதீதெனினும் ✳
நோதக்கதென்னுண்டாநோக்குங்காற்காதல் ✳
கழுமியார்செய்தகறங்கருவிநாட ✳
விழுமிதாநெஞ்சத்துணின்று. (௮)

தமரென்றுதாங்கொள்ளப்பட்டவர்தம்மைத் ✳
தமரன்மைதாமறிந்தாராயினவரைத் ✳
தமரினுநன்குமதித்துத்தமரன்மை ✳
தம்முளடக்கிக்கொளல். (௯)

குற்றமுமேனைக்குணமுமொருவனை ✳
நட்டபினாடித்திரிவேனேனட்டான் ✳
மறைகாவாவிட்டவன்செல்வழிச்செல்க ✳
வறைகடல்சூழ்வையநக. (௰)

நட்பிற்பிழைபொறுத்தல்-முற்றிற்று. ஆ உ௱௩௰

செறிப்பில்பழங்கூரைசேறணையாக *
விறைத்துநீரோற்றுங்கிடப்பர்கறைக்குன்றம் *
பொங்கருவிதாழும்புனல்வரைநன்னாட *
தங்கருமமுற்றுந்துணை. (௧)

சீரியார்கேண்மைசிறந்தசிறப்பிற்றாய் *
மாரிபோன்மாண்டபயத்ததாமாரி *
வறந்தக்காற்போலுமேவாலருவிநாட *
சிறந்தக்காற்சீரிலார்நட்பு. (௨)

நுண்ணுணர்வினாரொடுகூடிநுகர்வுடைமை *
விண்ணுலகேயொக்கும்விழைவிற்றானுண்ணூல் *
உணர்விலராகியவூதியமில்லார்ப் *
புணர்தனிரயத்துளொன்று. (௩)

பெருகுவதுபோலத்தோன்றிவைத்தீப்போல் *
ஒருபொழுதுஞ்செல்லாதேநந்துமருகெல்லாம் *
சந்தனநீள்சோலைச்சாரன்மலைநாட *
பந்தமிலாளர்தொடர்பு. (௪)

செய்யாதசெய்துநாமென்றலுஞ்செய்வதனைச் *
செய்யாதுதாழ்த்துக்கொண்டோட்டலும்மெய்யாக *
இன்புறூஉம்பெற்றியிகழ்ந்தார்க்குமந்நிலையே *
துன்புறூஉம்பெற்றிதரும். (௫)

ஒருநீர்ப்பிறந்தொருங்குநீண்டக்கடைத்தும் ✻
விரிநீர்க்குவளையையாம்பலொக்கல்லா ✻
பெருநீரார்கேண்மைகொளினுநீரல்லார் ✻
கருமங்கள்வேறுபடும். (௬)

முற்றற்சிறுமந்திமுற்பட்டதந்தையை ✻
நெற்றுக்கண்டன்னவிரலான்றேமிர்த்திட்டுக் ✻
குற்றிப்பறிக்குமலைநாடவின்னாதே ✻
ஒற்றுமைகொள்ளாதார்நட்பு. (௭)

முட்டுற்றபோழ்தின்முடுகியென்னாருயிரை ✻
நட்டானொருவன்கைநீட்டேனோநட்டான் ✻
கடிமனைகட்டழித்தான்செல்வுழிச்செல்க ✻
நெடுமொழிவையநக. (௮)

ஆன்படுநெய்பெய்கலனுளதுகளைந்து ✻
வேம்படுநெய்பெய்தனைத்தரோதேம்படு ✻
நல்வரைநாடநயமுணர்வார்நண்பொரீஇப் ✻
புல்லறிவினாரொடுநட்பு. (௯)

உருவிற்கமைந்தான்கணூராண்மையின்மை ✻
பருகற்கமைந்தபானீரளாயற்றே ✻
தெரிவுடையார்தீயினத்தராகுதனாகம் ✻
விரிபெடையோடாடிவிட்டற்று. (௰)

கூடாநட்பு - முற்றிற்று — ஆக உ௱௪௰.

பகைவர்பணிவிடநோக்கித்தகவுடையார் *
தாமேயுநாணித்தலைச்செல்லார்காணாய் *
இளம்பிறையாயக்காற்றிங்களைச்சேரா *
தணங்கருந்துப்பினரா. (௧)

நளிகடற்றண்சேர்ப்பநல்கூர்ந்தக்கட் *
கணிகலமாவதடக்கம்பணியில்சீர் *
மாத்திரையின்றிநடக்குமேல்வாழுமூர் *
கோத்திரங்கூறப்படும். (௨)

எந்நிலத்துவித்திடினுங்காஞ்சிரங்காழ்தெங்காகா *
தென்னாட்டவருஞ்சுவர்க்கம்புகுதலால் *
தன்னாற்றானாகுமறுமைவடதிசையுங் *
கொன்னாளர்சாலப்பலர். (௩)

வேம்பினிலையுட்கனியினும்வாழைதன் *
றீஞ்சுவையாதுந்திரியாதாமாங்கே *
இனந்தீதெனினுமியல்புடையார்கேண்மை *
மனந்தீதாம்பக்கமரிது. (௪)

கடல்சார்ந்துமின்னீர்பிறக்குமலைசார்ந்தும் *
உப்பீண்டுவரிபிறத்தலாற்றத்தம் *
இனத்தனையரல்லரெறிகடற்றண்சேர்ப்ப *
மனத்தனையர்மக்களென்பார். (௫)

பராஅரைப்புன்னைபடுகடற்றண்சேர்ப்ப *
ஓராஅலுமொ[illegible]லுஞ்செய்பவோநல்ல *
மருஉச்செய்தி[illegible]ாட்டுந்தங்குமநத்தார் *
விராஅய்ச்செய்யாமைநன்று. ௬)

உணரவுணருமுணர்வுடையாரைப் *
புணரப்புணருமாமின்பம்புணரில் *
தெரியத்தெரியுந்தெரிவிலாதாரைப் *
பிரியப்பிரியுமாநோய். ௭)

நன்னிலைக்கட்டன்னைநிறுப்பானுந்தன்னை *
நிலைகலக்கிக்கீ[illegible]டுவ[illegible]னுநிலையினும் *
மேன்மேலுயர்த்துநிறுப்பானுந்தன்னைத் *
தலையாகச்செய்வானுந்தான். [illegible]

கருமவரிசையாற்கல்லாதார்பின்னுஞ் *
பெருமையுடையாருஞ்சேறலருமரபின் *
ஓதம[illegible]மொலிகடற்றண்சேர்ப்ப *
பேதைமையன்றதறிவு. (௯)

கருமமுமுள்படாப்போகமுந்துவ்வாத் *
தருமமுந்தக்கார்க்கேசெய்யாவொருநிலையே *
முட்டின்றிமூன்றுமுடியுமேலஃதென்ப *
பட்டினம்பெற்றகலம். (௰)

அறிவுடைமை; முற்றிற்று — ௵ உ௱௫௰.

நுண்ணுணர் வின்மை வறுமை யஃதுடைமை ❋
பண்ணப் பணைத்த பெருஞ்செல்வ மெண்ணுங்கால் ❋
பெண்ணவா யாணிழந்த பேடி யணியாளோ ❋
கண்ணவாத் தக்க கலம். (௧)

பல்லான்ற கேள்விப் பயனுணர்வார் பாடழிந் ❋
தல்ல லுழப்ப தறிதிரோ தொல்சிறப்பின், ❋
நாவின் கிழத்தி யுறைதலாற் சேராளே ❋
பூவின் கிழத்தி புலந்து. (௨)

கல்லென்று தந்தை கழற வதனையோர் ❋
சொல்லென்று கொள்ளா திகழ்ந்தவன் மெல்ல ❋
எழுத்தோலை பல்லார்முன் னீட்ட விளியான் ❋
கழுத்தோலை கண்டு விடும். (௩)

கல்லாது நீண்டொருவ னுலகத்து ❋
நல்லறிவா ளரிடைப் புக்குமெல்ல ❋
இருப்பினு நாயிருந்தற் றிராஅ ❋
துரைப்பினு நாய்குரைத் தற்று. (௪)

புல்லாப்புன் கோட்டிப் புலவரிடைப் புக்குக் ❋
கல்லாத சொல்லுங் கடையெலாங் கற்ற ❋
கடாஅ யினுஞ்சான் றவர்சொல்லார் பொருண்மேல் ❋
படாஅ விடுபாக் கறிந்து. (௫)

கற்றறிந்தநாவினார்சொல்லார்தஞ்சோர்வஞ்சி
மற்றையராவார்பகர்வர்பனையின்மேல்
வற்றியவோலைகலகலக்குமெஞ்ஞான்றும்
பச்சோலைக்கில்லையொலி. (௬)

பன்றிக்கூழ்ப்பத்தரிற்றேமாவடித்தற்றால்
நன்றறியாமாந்தர்க்கறத்தாறுரைக்குங்கால்
குன்றின்மேற்கொட்டுந்தறிபோற்றலைதகர்ந்து
சென்றிசையாவாகுஞ்செவிக்கு. (௭)

பாலாற்கழீஇப்பலநாளுணக்கினும்
வாலிதாம்பக்கமிருந்தைக்கிருந்தன்று
கோலாற்கடாஅய்க்குறினும்புகலொல்லா
நோலாவுடம்பிற்கறிவு.

பொழிந்தினிதுநாறினும்பூமிசைதல்செல்லா
திழிந்தவைகாமுறூஉமீப்போலிழிந்தவை
தாங்கலந்தநெஞ்சினார்க்கென்னாகுந்தக்கார்வாய்த்
தேன்கலந்ததேற்றச்சொற்றேர்வு. (௯)

கற்றாருரைக்குங்கசடறுநுண்கேள்வி
பற்றாதுதன்னெஞ்சுகைத்தலான்மற்றுமோர்
தன்போலொருவன்முகநோக்கித்தானுமோர்
புன்கோட்டிகொள்ளுமாங்கீழ். (௰)

அறிவின்மை - முற்றிற்று — ௩௩-உ அதிகாரம்.

அருகலதாகிப்பலபழுத்தக்கண்ணும்
பொரிதாள்விளவினைவாவல்குறுகா
பெரிதணியராயினும்பீடிலார்செல்வம்
கருதுங்கடப்பாட்டதன்று. (க)

அள்ளிக்கொள்வன்னகுறுமுகிழ்வாயினும்
கள்ளிமேற்கைநீட்டார்சூடும்பூவன்மையால்
செல்வம்பெரிதுடையராயினுங்கீழ்களை
நள்ளாரறிவுடையார். (உ)

மல்குதிரையகடற்கோட்டிருப்பினும்
வல்லூற்றுவரில்கிணற்றின்கட்சென்றுண்பர்
செல்வம்பெரிதுடையராயினுஞ்சேட்சென்று
நல்குவார்கட்டேநசை. (௩)

புணர்கடல்சூழ்வையத்துப்புண்ணியமோவேறே
உணர்வதுடையாரிருப்பவுணர்விலா
வட்டும்வழுதுணையும்போல்வாரும்வாழ்வரே
பட்டுந்துகிலுமுடுத்து. (௪)

நல்லார்நயவரிருப்பநயமிலாக்
கல்லார்க்கொன்றாகியகாரணந்தொல்லை
வினைப்பயனல்லதுவேனெடுங்கண்ணாய்
நினைப்பவருவதொன்றில். (௫)

நாருக்தகடேபோனன்மலர்மேற்பொற்பாவாய் *
நீருய்நிலச்துழிளியரோவேருய *
புன்மக்கள்பக்கம்புகுவாய்நீபொன்போலும் *
நன்மக்கள்பக்கந்துறந்து. (௬)

நயவார்கணல்குரவுநாணின்றுகொல்லோ *
பயவார்கட்செல்வம்பரம்பப்பயின்கொல் *
வியவாய்காண்வேற்கண்ணாயிவ்விரண்டுமாங்கே *
நயவாதுநிற்குநிலை. (௭)

வலவைகளல்லாதார்காலாறுசென்று *
கலனைகளுண்டுகழிப்பர்வலவைகள் *
காலாறுஞ்செல்லார்கருனையாற்றுய்ப்பவே *
மேலாறுபாயவிருந்து (௮)

பொன்னிறச்செந்நெற்பொதியொடுபீள்வாட *
மின்னொளிர்வானங்கடலுள்ளுங்கான்றுகுக்கும் *
வெண்மையுடையார்விழுச்செல்வமெய்தியக்கால் *
வண்மையுமன்னதகைத்து. (௯)

ஓதியுமோதாருணர்விலாரோதாதும் *
ஓதியனையாருணர்வுடையார்தூய்தாக *
நல்கூர்ந்துஞ்செல்வரிரவாதார்செல்வரும் *
நல்கூர்ந்தாரீயாரெனின். (௰)

நன்றியில்செல்வம்-முற்றிற்று—ஆக உ௱எ௰.

நட்டார்க்கு நல்லா தவர்க்கு முளவனையால் *
அட்டதுபாத்துண்டலட்டுண்டலட்டு *
அடைத்திருந்துண்டொழுகுமாவதின்மாக்கட் *
கடைக்குமாமாண்டைக்கதவு. (க)

எத்துணையானுமியைந்தவளவினால் *
சிற்றறஞ்செய்தார்தலைப்படுவர்மற்றைப் *
பெருஞ்செல்வமெய்தியக்கால் பின்னறிதுமென்பார் *
அழிந்தார்பழிகடலத்துள். (உ)

துய்த்துக்கழியான்றுறவோர்க்கொன்றீகலான் *
வைத்துக்கழியுமடவோனைவைத்த *
பொருளுமவனைநகுமேயுலகத் *
தருளுமவனைநகும். (௩)

கொடுத்தலுந்துய்த்தலுந்தேற்றாவிடுக்குடை *
உள்ளத்தான்பெற்றபெருஞ்செல்வமில்லத் *
துருவுடைக்கன்னியரைப்போலப்பருவத்தால் *
ஏதிலான்றுய்க்கப்படும். (௪)

எறிநீர்ப்பெருங்கடலெய்தியிருந்தும் *
மறுநீர்ச்சிறுகிணற்றூறல்பார்த்துண்பர் *
மறுமையறியாதாராக்கத்திற்சான்றோர் *
கழிநல்குரவேதலை. (௫)

எனதெனதென்றிருக்குமேழைபொருளை ❋
எனதெனதென்றிருப்பன்யானுந்தனதாயின் ❋
தானுமதனைவழங்கான்பயன்றுவ்வான் ❋
யானுமதனையது. (௬)

வழங்காதசெல்வரினல்கூர்ந்தாருய்ந்தார் ❋
இழந்தாரெனப்படுதலுய்ந்தாருழந்ததனைக் ❋
காப்புய்ந்தார்கல்லுதலுய்ந்தார்தங்கைநோவ ❋
ஆப்புய்ந்தாருய்ந்தபல. (௭)

தனதாகத்தான்கொடான்றாயத்தவரும் ❋
தமதாயபோழ்தேகொடாஅர்தனதாக ❋
முன்னேகொடுப்பினவர்கடியார்தான்கடியான் ❋
பின்னையவர்கொடுக்கும்போழ்து. (௮)

இரவலர்கன்றாகவீவாராவாக ❋
விரகிற்சுரப்பதாம்வண்மைவிரகின்றி ❋
வல்லவரூன்றவடியாபோல்வாய்வைத்துக் ❋
கொல்லச்சுரப்பதாங்கீழ். (௯)

ஈட்டலுந்துன்பமற்றீட்டியவொண்பொருளைக் ❋
காத்தலுமாங்கேகடுந்துன்பங்காத்தல் ❋
குறைபடிற்றுன்பங்கெடிற்றுன்பந்துன்பக் ❋
குறைபதிமற்றைப்பொருள். (௰)

ஈயாமை - முற்றிற்று — ௨௮ ௨௱௮௰.

அத்திட்டகூறையரைச்சுற்றிவாழினும் ✻
பத்தெட்டுடைமைபலருள்ளும்பாடெய்தும் ✻
ஒத்தகுடிப்பிறந்தக்கண்ணுமொன்றில்லாதார் ✻
செத்தபிணத்திற்கடை. (௧)

நீரினுநுண்ணிதுநெய்யென்பர்நெய்யினும் ✻
யாருமறிவர்புகைநுட்பந்தேரில் ✻
நிரப்பிடும்பையாளன்புகுமேபுகையும் ✻
புகற்கரியபூழைநுழைந்து. (௨)

கல்லோங்குயர்வரைமேற்காந்தண்மலராக்கால் ✻
செல்லாவாஞ்செம்பொறிவண்டினங்கொல்லைக் ✻
கலாஅற்கிளிகடியுங்கானகநாட ✻
இலாஅஅர்க்கில்லைத்தமர். (௩)

உண்டாயபோழ்திலுடைத்துழிக்காகம்போல் ✻
தொண்டாயிரவர்தொகுபவேவண்டாய்த் ✻
திரிதருங்காலத்துத்தீதிலிரோவென்பார் ✻
ஒருவருமிவ்வுலகத்தில். (௪)

பிறந்தகுலமாயும்பேராண்மைமாயும் ✻
சிறந்ததங்கல்வியுமாயுங்கறங்கருவி ✻
கன்மேற்கழூஉங்கணமலைநன்னாட ✻
இன்மைதழுவப்பட்டார்க்கு. (௫)

உள்கூர்பசியாலுழைநசைஇச்சென்றார்கட் *
குள்ளூரிருந்துமொன்றாற்றாதானுள்ளூர் *
இருந்துயிர்கொன்னேகழியாதுதான்போய் *
விருந்தினனாதலேநன்று (௬)

நீர்மையேயன்றிநிறம்பவெழுந்ததம் *
கூர்மையுமெல்லாமொருங்கிழப்பர்கூர்மையின் *
முல்லையிலைக்குமெயிற்றாய்நிரப்பென்னும் *
அல்லலடையப்பட்டார். (௭)

இட்டாற்றுப்பட்டொன்றிரந்தவர்க்காற்றாது *
முட்டாற்றுப்பட்டுமுயன்றுள்ளூர்வாழ்தலின் *
நெட்டாற்றுச்சென்றுநிரைமனையிற்கைந்நீட்டும் *
கெட்டாற்றுவாழ்க்கையேநன்று. (௮)

கடகஞ்செறிந்ததங்கைகளால்வாங்கி *
அடகுபறித்துக்கொண்டட்டுக்குடைகலனா *
உப்பிலிவெந்தைதின்றுள்ளற்றுவாழ்பவே *
துப்புரவுசென்றுலந்தக்கால். (௯)

ஆர்த்தபொறியவணிகிளர்வண்டினம் *
பூத்தொழிகொம்பின்மேற்செல்லாவாநீர்த்தருவி *
தாழாவுயர்சிறப்பிற்றண்குன்றநன்னாட *
வாழாதார்க்கில்லைதமர். (௰)

இன்மை - முற்றிற்று — அதி. ௨௱௯௰.

திருமதுகையாகத் திறனிலார் செய்யும் *
பெருமிதங் கண்டக்கடைத்து மெரிமண்டிக் *
கானந் தலைப்பட்ட தீப்போற் கனலுமே *
மானமுடையார் மனம். (௧)

என்பாயுகினு மியல்பிலார் பின்சென்று *
தம்பாடுரைப்பரோ தம்முடையார் தம்பா *
டுரையாமைமுன்னுணரு மொண்மையுடையார்க் *
குரையாரோ தாமுற்ற நோய். (௨)

யாமாயினெம்மில்லங் காட்டுதுந் தாமாயிற் *
காணவேகற்பழியு மென்பார்போ னாணிப் *
புறங்கடைவைத்தீவர் சோறுமதனால் *
மறந்திடுக செல்வர் தொடர்பு. (௩)

இம்மையு நன்றா மியனெறியுங் கைவிடா *
தும்மையு நல்ல பயத்தலாற் செம்மையின் *
நாணங் கெழுங்க துப்பிலுய் நன்றேகாண் *
மானமுடையார் மதிப்பு. (௪)

பாவமு மேனைப் பழியும் படவருவ *
சாயினுஞ்சான்றவர் செய்கலார் சாதல் *
ஒருநாளொருபொழுதைத் துன்பமவைபோல் *
அருநவையாற்றுத லின்று. (௫)

மல்லன்மாஞாலத்துவாழ்பவருளெல்லாம்
செல்வரெனினுங்கொடாதவர்நல்கூர்ந்தார்
நல்கூர்ந்தக்கண்ணும்பெருமுத்தரையரே
செல்வரைச்சென்றிரவாதார். (௬)

கடையெலாங்காய்பசியஞ்சுமற்றேனை
இடையெலாமின்னாமையஞ்சும்புடைபரந்த
விற்புருவவேனெடுங்கணாய்தலையெல்லாம்
சொற்பழியஞ்சிவிடும். (௭)

நல்லர்பெரிதளியர்நல்கூர்ந்தாரென்றெள்ளிச்
செல்வர்சிறுநோக்குநோக்குங்காற்கொல்லன்
உலையூதுந்தீயேபோலுள்கனலுங்கொல்லோ
தலையாயசான்றோர்மனம். (௮)

நச்சியார்க்கீயாமைநாணன்றுநாணாளும்
அச்சத்தானாணுதனாணன்றாமெச்சத்தின்
மெல்லியராகித்தம்மேலாயார்செய்தது
சொல்லாதிருப்பதுநாண். (௯)

கடமாதொலைச்சியகானுறைவேங்கை
இடம்வீழ்ந்ததுண்ணாதிறக்குமிடமுடைய
வானகங்கையுறினும்வேண்டார்விழுமியோர்
மானமழுங்கவரின். (௰)

மானம் முற்றிற்று—அ௩௰.

தம்மாலேயாவரிந் நல்கூர்ந்தாரொஞ்ஞான்றும்
தம்மாலாமாக்கமிலரென்றுதம்மை
மருண்டமனத்தார்பின்செல்பவோதாமும்
தெருண்டவறிவினவர். (க)

இழித்தக்கசெய்தொருவனாரவுணாவில்
பழித்தக்கசெய்யான்பசித்தறவன்றே
விழித்திமைக்குமாத்திரையன்றேயொருவன்
அழித்துப்பிறக்கும்பிறப்பு. (உ)

இல்லாமைகந்தாவிரவுதுணிந்தொருவர்
செல்லாருமல்லர்சிறுநெறிபுல்லா
அகம்புகுமின்னென்பவர்மாட்டல்லால்
முகம்புகுதலாற்றுமோமேல். (ஙு)

திருத்தன்னைநீப்பினுந்தெய்வஞ்செறினும்
உருத்தமநத்தோடுயர்வுள்ளினல்லால்
அருத்தஞ்செறிக்குமறிவிலார்பின்சென்
றெருத்திறைஞ்சிநில்லாதாமேல். (௪)

கரவாதுகின்னன்பிற்கண்ணன்னோர்கண்ணும்
இரவாதுவாழ்வதாம்வாழ்க்கையிரவினை
உள்ளுங்காலுள்ளமுருகுமாலென்கொலோ
கொள்ளுங்காற்கொள்வார்குறிப்பு. (ரு)

இன்னாவிளையகவினியவொழிகென்று *
தன்னையே தானிரப்பக்கிரவகற்றிக்கன்னைசொல் *
காதல்கவற்றுமநத்தினுற்கண்பாழ்பட் *
டேதிலவனாயிரவு. (௬)

என்றும்புகியார்பிறப்பினுமிவ்வுலகத் *
தென்றுமவனேபிறக்கலான்குன்றின் *
பரப்பெலாம்பொன்னொழுகும்பாயருவிநாட *
இரப்பாரையெள்ளாமகன். (௭)

புறத்துத்தன்னின்மைநலியவகத்துத்தன் *
நன்றானைநீக்கிநிறீஇயொருவனை *
யாயெனக்கென்றிரப்பான்ஞாலத்தினிலையே *
மாயானோமாற்றிவிடின். (௮)

ஒருவரொருவரைச்சார்ந்தொழுகலாற்றி *
வழிபடுதல்வல்லுதலல்லாற்பரிசழிந்து *
செய்யீரோவென்றுமெனினுஞ்சொற்கின்றேதே *
வையத்தான்செல்லுநெறி. (௯)

பழமைகந்தாசப்பசைந்தவழியே *
கிழமைதான்யாதானுஞ்செய்ககிழமை *
பொறாஅஅரவனென்லிற்பொத்தித்தநெஞ்சத் *
தூஉஅச்சுடுவதோர்தீ. (௰)

இரவச்சம் - முற்றிற்று — அதி ௱௭.

மெய்ஞ்ஞானக்கோட்டியுறழ்வழிவிட்டாங்கோர் *
அஞ்ஞானந்தந்திட்டதுவாங்கறத்துழாய்க் *
கைஞ்ஞானங்கொண்டொழுகுங்காரறிவாளர்முன் *
சொன்ஞானஞ்சோரவிடல். (௧)

நாப்பாடஞ்சொல்லிநயமுணர்வார் போற்செறிக்கும்
தீப்புலவற்சேரார்செறிவுடையார்தீப்புலவன் *
கோட்டிப்புட்குன்றக்குடிப்பழிக்குமல்லாக்கால் *
தோட்புடைக்கொள்ளாவெழும். (௨)

சொற்றாற்றுக்கொண்டுசுனைத்தெழுதல்காமுறுவர் *
கற்றாற்றல்வன்மையுந்தாந்தேற்றார்கற்ற *
செலவுரைக்குமாறறியார்தோற்பதறியார் *
பலவுரைக்குமாந்தர்பலர். (௩)

கற்றதூஉமின்றிக்கணக்காயர்பாடத்தால் *
பெற்றதாம்பேதையோர்சூத்திரமற்றதனை *
நல்லாரிடைப்புக்குநாணாதுசொல்லித்தன் *
புல்லறிவுகாட்டிவிடும். (௪)

வென்றிப்பொருட்டால் விலங்கொத்து மெய்க்கொள்
கன்றிக்கறுத்தெழுந்துகாய்வாரோடொன்றி [ளார்
உரைவித்தகமெழுமார்காண்பவேகையுள் *
சுரைவித்துப்போலுந்தம்பல். (௫)

பாடமேயோதிப்பயன்றெரிதறேற்றாத *
மூடர்முனிதக்கசொல்லுங்காற்கேடருஞ்சீர்ச் *
சான்றோர்சமழ்த்தனர்நிற்பவேமற்றவரை *
ஈன்றாட்கிறப்பப்பரிந்து. (௬)

பெறுவதுகொள்பவர்தோள்போனெறிபட்டுக் *
கற்பவர்க்கெல்லாமெளியநூன்மற்றம் *
முறிபுரைமேனியருள்ளம்போன்றியார்க்கும் *
அறிதற்கரியபொருள். (௭)

புத்தகமேசாலத்தொகுத்தும்பொருடெரியார் *
உய்த்தகமெல்லாநிறைப்பினுமற்றவற்றைப் *
போற்றும்புலவரும்வேறேபொருடெரிந்து *
தேற்றும்புலவரும்வேறு. (௮)

பொழிப்பகலநுட்பநூலெச்சமிந்நான்கின் *
கொழித்தகலங்காட்டாதார்சொற்கள்பழிப்பின் *
றிழையாமாசேக்குநெடுங்குன்றநாட *
உழையாமோநூலிற்குநன்கு. (௯)

இற்பிறப்பில்லாரெனைத்துநூல்கற்பினும் *
சொற்பிறரைக்காக்குங்கருவியரோவிற்பிறந்த *
நல்லறிவாளர்நவின்றநூறேற்றாதார் *
புல்லறிவுதாமறிவதில். (௰)

அவையறிதல் - முற்றிற்று — அதிகாரம் ௩௰௨.

அருளினமருமறைக்குமன்புடையார்வாய்ச்சொல் ❋
பொருளாகக்கொள்வர்புலவர்பொருளல்லா ❋
ஏழையதனையிகழ்ந்துரைக்கும்பாற்கூழை ❋
மூழைசுவையுணராதாங்கு. (௧)

அவ்வியமில்லாரறத்தாறுரைக்குங்கால் ❋
செவ்வியரல்லார்செவிகொடுத்துங்கேட்கலார் ❋
கவ்வித்தோறின்னுங்குணுங்கர்நாய்பாற்சோற்றின் ❋
செவ்விகொளறேற்றாதாங்கு. (௨)

இமைக்குமளவிற்றம்மின்னுயிர்போமார்க்கம் ❋
எனைத்தானுந்தாங்கண்டிருந்துந்தினைத்துணையும் ❋
நன்றிபுரிகல்லாதாரின்மடமாக்கள் ❋
பொன்றிலென்பொன்றாக்காலென். (௩)

உளநாள்சிலவாலுயிர்க்கேமமின்றால் ❋
பலர்மன்னுந்தூற்றும்பழியாற்பலருள்ளும் ❋
கண்டாரோடெல்லாநகாஅதெவனொருவன் ❋
தண்டித்தனிப்பகைகோள். (௪)

எய்தியிருந்தவவைமுன்னர்ச்சென்றெள்ளி ❋
வைதாரொருவரொருவனைவைய ❋
வையப்பட்டான்வாழ்வாவிருப்பானேல்வைதான் ❋
வியத்தக்கான்வாழுமெனல். (௫)

மூப்புமேல்வாராமைமுன்னேயறவினையை *
ஊக்கியதன்கண்முயலாதானூக்கிப் *
புறத்திருபோவென்னுமின்னாச்சொலில்லுள் *
தொழுத்தையாற்கூறப்படும். (௬)

தாமேயுமின்புறார் தக்கார்க்குநன்றாற்றார் *
ஏமஞ்சார்நன்னெறியுஞ்சேர்கலார்தாமயங்கி *
யாக்கத்துட்டூங்கியவத்தமேவாழ்நாளைப் *
போக்குவார்புல்லறிவினார். (௭)

சிறுகாலையேதமக்குச்செல்வுழிவல்சி *
இறுகிறுகத்தோட்கோப்புக்கொள்ளாரிறுகிறுகிப் *
பின்னறிவாமென்றிருக்கும்பேதையார்கைகாட்டும் *
பொன்னும்புளிவிளங்காயாம். (௮)

வெறுமையிடத்தும்விழுப்பிணிப்போழ்து *
மறுமைமறந்தாரோயாகிமறுமையை *
ஐந்தையனைத்தானுமாற்றியகாலத்துச் *
சிந்தியார்சிற்றறிவினார். (௯)

என்னோமற்றிவ்வுடம்புபெற்றுமறுநினையார் *
சொன்னேகழிப்பர்தம்வாழ்நாளையன்றே *
அரவிறந்தகாதற்றம்மாருயிரன்னாக் *
கொரவிழைக்குங்கூற்றமுங்கண்டு. (௰)

புல்லறிவாண்மை - முற்றிற்று - ஸ்ரீ ௩௱௩௰

கொலைஞருலையேற்றித்தீமடுப்பவாமை ✻
நிலையறியாதந்நீர்படிந்தாடியற்றே ✻
கொலைவல்பெருங்கூற்றங்கோட்பார்ப்பவீண்டை ✻
வலையகத்துச்செம்மாப்பார்மாண்பு. (௧)

பெருங்கடலாடியசென்றாரொருங்குடன் ✻
ஓசையவிந்தபின்னாடுதுமென்றற்றால் ✻
இற்செய்குறைவினைநீக்கியறவினை ✻
மற்றறிவாமென்றிருப்பார்மாண்பு. (௨)

குலந்தவங்கல்விகுடிமைமூப்பைந்தும் ✻
விலங்காமலெய்தியக்கண்ணு நலஞ்சான்ற ✻
மையறுதொல்சீருலகமறியாமை ✻
நெய்யிலாப்பாற்சோற்றினேர். (௩)

கன்னனிநல்லகடையாயமாக்களிற் ✻
சொன்னனிதாமுணராவாயினுமின்னினியே ✻
நிற்றலிருத்தல்கிடத்தலியங்குதலென் ✻
றுற்றவர்க்குத்தாமுதவலான். (௪)

பெறுவதொன்றின்றியும்பெற்றானேபோலக் ✻
கறுவுகொண்டேலாதார்மாட்டுங்கறுவினாற் ✻
கோத்தின்னாகூறியுரையாக்காற்பேதைக்கு ✻
நாத்தின்னுநல்லசுணைத்து. (௫)

தங்கண்மரபில்லார்பின்சென்றுதாமவரை *
எங்கண்வணக்குதுமென்பவர்புன்கேண்மை *
நற்றளிர்ப்புன்னைமலருங்கடற்சேர்ப்ப *
கற்கிள்ளிக்கையிழந்தற்று. (௬)

ஆகாதெனினுமகத்துநெய்யுண்டாகில் *
போகாதெறும்புபுறஞ்சுற்றும்யாதும் *
கொடாஅரெனினுமுடையாரைப்பற்றி *
விடாஅருலகத்தவர். (௭)

நல்லவைநாடொறுமெய்தாரறஞ்செய்யார் *
இல்லாதார்க்கியாதொன்றுமீகலாரெல்லாம் *
இனியார்தோள்சேராரிசைபடவாழார் *
முனியார்கொறாம்வாழுநாள். (௮)

விழைந்தொருவர்தம்மைவியப்பவொருவர் *
விழைந்திலேமென்றிருக்குங்கேண்மைதழங்குகுரல்
பாய்திரைசூழ்வையம்பயப்பினுமின்னாதே *
ஆய்நலமில்லாதார்மாட்டு. (௯)

கற்றனவுங்கண்ணகன்றசாயலுமிற்பிறப்பும் *
பக்கத்தார்பாராட்டப்பாடெய்துந்தானுணைப்பின் *
மைத்துனர்பல்கிமருந்திற்றணியாத *
பித்தனென்றெள்ளப்படும். (௰)

பேதைமை - முற்றிற்று — அதிகாரம் ௩௰௪.

கப்பிகடவதாக்காலைத்தன்வாய்ப்பெயினும் ✱
குப்பைகிளைப்போவாக்கோழிபோன்மிக்க ✱
கனம்பொதிந்தநூல்விரித்துக்காட்டினுங்கீழ்தன் ✱
மனம்புரிந்தவாறேமிகும். (௧)

காழாயகொண்டுகசடற்றார்தஞ்சாரல் ✱
தாழாதுபோவாமெனவுரைப்பிற்கீழ்தான் ✱
உறங்குவாமென்றெழுந்துபோமாமஃதன்றி ✱
மறங்குமாமற்றொன்றுரைத்து. (௨)

பெருநடைதாம்பெறினும்பெற்றிபிழையா ✱
தொருநடையராகுவர்சான்றோர்பெருநடை ✱
பெற்றக்கடைத்தும்பிறங்கருவிநன்னாட ✱
வற்றாமொருநடைகீழ். (௩)

தினையனைத்தேயாயினுஞ்செய்தநன்றுண்டால் ✱
பனையனைத்தாவுள்ளுவர்சான்றோர்பனையனைத் ✱
தென்றுஞ்செயினுமிலங்கருவிநன்னாட ✱
நன்றிலநன்றறியார்மாட்டு. (௪)

பொற்கலத்தூட்டிப்புறந்தரினுநாய்பிறர் ✱
எச்சிற்கிமையாதுபார்த்திருக்குமச்சீர் ✱
பெருமையுடைத்தாக்கொளினுங்கீழ்செய்யும் ✱
கருமங்கள்வேறுபடும். (௫)

சக்கரச்செல்வம்பெறினும்விழுமியோர்
எக்காலுஞ்சொல்லார்மிகுதிச்சொல்-எக்காலும்
முந்திரிமேற்காணிமிகுவதேற்கீழ்தன்னை
இந்திரனாவெண்ணிவிடும். (௬)

மைதீர்பசும்பொன்மேன்மாண்டமணியழுத்திச்
செய்ததெனினுஞ்செருப்புத்தன்காற்கேயாம்
எய்தியசெல்வத்தராயினுங்கீழ்களைச்
செய்தொழிலாற்காணப்படும். (௭)

கடுக்கெனச்சொல்வற்றாங்கண்ணோட்டமின்றாம்
இடுக்கண்பிறர்மாட்டுவக்குமடுத்தடுத்து
வேகமுடைத்தாம்விறன்மலைநன்னாட
வேகுமாமென்றுமாங்கீழ். (௮)

பழையரிவரென்றுபண்டொட்டிப்பின்னிற்பின்
உழையினியராகுவர்சான்றோர்விழையாதே
கள்ளுயிர்க்குநெய்தற்கனைகடற்றண்சேர்ப்ப
எள்ளுவர்கீழாயவர். (௯)

கொய்புற்கொடுத்துக்குறைத்தென்றுந்தீற்றினும்
வையம்பூண்கல்லாசிறுகுண்டையையகேள்
எய்தியசெல்வத்தராயினுங்கீழ்களைச்
செய்தொழிலாற்காணப்படும். (௰)

கீழ்மை - முற்றிற்று — ஆக — ௩௱௫௰.

ஆர்த்தவறிவினராண்டிளையராயினும் ❋
காத்தோம்பித்தம்மையடக்குபமூத்தொறூஉந் ❋
தீத்தொழிலேகன்றித்திரிதந்தெருவைபோல் ❋
போத்தறார்புல்லறிவினார். (௧)

செழும்பெரும்பொய்கையுள்வாழினுமென்றும் ❋
வழும்பறுக்ககில்லாவாந்தேரைவழும்பில்சீர் ❋
நூல்கற்றக்கண்ணுநுணுக்கமொன்றில்லாதார் ❋
தேர்கிற்கும்பெற்றியரிது. (௨)

கணமலைநன்னாடகண்ணின்றொருவர் ❋
குணனேயுங்கூறற்கரிதாற்குணனழுங்கக் ❋
குற்றமுழைநின்றுகூறுஞ்சிறியவர்கட் ❋
கெற்றாலியன்றதோநா. (௩)

கோடேந்தகலல்குற்பெண்டிர்தம்பெண்ணீர்மை ❋
சேடியர்போலச்செயறேற்றார்கூடிப் ❋
புதுப்பெருக்கம்போலத்தம்பெண்ணீர்மைகாட்டி ❋
மதித்திறப்பர்மற்றையவர். (௪)

தளிர்மேலேநிற்பினுந்தட்டாமற்செல்லா ❋
உளிநீரர்மாதோகயவரளிநீரார்க் ❋
கென்னானுஞ்செய்யாரெனைத்தானுஞ்செய்பவே ❋
இன்னாங்குசெய்வார்ப்பெறின். (௫)

மலை நலமுள்ளூங் குறவன் பயந்த
விளை நிலமுள்ளு முழவன் சிறந்தொருவர்
செய்த நன்றுள்ளுவர் சான்றோர் கயந்தன்னை
வைததை யுள்ளி விடும். (௬)

ஒரு நன்றி செய்தவர்க் கொன்றி யெழுந்த
பிழைநூறுஞ் சான்றோர் பொறுப்பர் கயவர்க்
கெழுநூறு நன்றி செய்தொன்று தீதாயில்
எழுநூறுந் தீதாய் விடும். (௭)

ஏட்டைப் பருவத்து மிற்பிறந்தார் செய்வன
மோட்டிடத்துஞ் செய்யார் முழுமக்கள் கோட்டை
வயிரஞ் செறிப்பினும் வாட்கண்ணாய் பன்றி
செயிர்வேழ மாகுதலின்று. (௮)

இன்றாது மிந்நிலையே யாது மினிச்சிறிது
நின்றாது மென்று நினைத்திருந் தொன்றி
உரையின் மகிழ்ந்து தம்முள்ளம் வேறாகி
மரையிலையின் மாய்ந்தார் பலர். (௯)

நீருட் பிறந்து நிறம்பசிய தாயினும்
ஈரங் கிடையகத் தில்லாகு மோரும்
நிறைப்பெருஞ் செல்வத்து நின்றக் கடைத்தும்
அறைப்பெருங் கலன்னா ருடைத்து (௰)

கயமை - முற்றிற்று — ஆ ௩௱௬௰.

மழைதிளைக்குமாடமாய்மாண்பமைந்தகாப்பாய் *
இழைவிளக்குநின்றிமைப்பினென்னாம்விழைதக்க *
மாண்டமனையாளையில்லாதானில்லகம் *
காண்டற்கரியதோர்காடு. (௧)

வழுக்கெனைத்துமில்லாதவாள்வாய்க்கிடந்தும் *
இழுக்கினைத்தாம்பெறுவராயினிழுக்கெனைத்தும் *
செய்குறும்பாணிசிறிதேயச்சின்மொழியார் *
கையுறுப்பாணிபெரிது. (௨)

எறியென்றெதிர்நிற்பாள்கூற்றஞ்சிறுகாலை *
அட்டில்புகாதாளரும்பிணியட்டதனை *
உண்டியுதவாதாளில்வாழ்பேயிம்மூவர் *
கொண்டானைக்கொல்லும்படை. (௩)

சடியெனக்கேட்டுங்கடியான்வெடிபட *
வார்ப்பதுகேட்டுமதுதெளியான்பேர்த்துமோர் *
இற்கொண்டினிதிருஉமேமுறுதலென்பவே *
சற்கொண்டெறியுந்தவறு. (௪)

தலையேதவமுயன்றுவாழ்தலொருவர்க் *
கிடையேயினியார்கட்டங்கல்கடையே *
புணராதென்றெண்ணிப்பொருணசையாற்றம்மை *
உணரார்பின்சென்றுநிலை. (௫)

கல்லாக்கழிப்பர் தலையாயார் நல்லவை
துவ்வாக்கழிப்பரிடைகள் கடைகள்
இனிதுண்ணேமாரப்பெறேமியாமென்னும்
முனிவினாற்கண்பாடிலர். (௬)

செந்நெல்லாலாய செழுமுளை மற்றுமச்
செந்நெல்லேயாகிவிளைதலால் அந்நெல்
வயனிறையக்காய்க்கும் வளவயலூர
மகனறிவு தந்தையறிவு. (௭)

உடைப்பெருஞ்செல்வருஞ்சான்றோருங்கெட்டுப்
புடைப்பெண்டிர்மக்களுங்கீழும்பெருகிக்
கடைக்கால்தலைக்கண்ணதாகிக்குடைக்கால்போல்
கீழ்மேலாய்நிற்குமுலகு. (௮)

இனியார்தந்நெஞ்சத்துநோயுரைப்பவந்நோய்
தணியாதவுள்ளமுடையார்மணிவரன்றி
வீழுமருவிவிறன்மலைநன்னாட
வாழ்வின்வரைபாய்தனன்று. (௯)

புதுப்புனலும்பூங்குழையார்நட்புமிரண்டும்
விதுப்பறநாடின்வேறல்லப்புதுப்புனலும்
மாரியறவேயறுமேயவரன்பும்
வாரியறவேயறும். (௰)

பன்னெறி - முற்றிற்று — ஆக்கூ ௱௭௰.

விளக்கொளியும்வேசையர்நட்புமிரண்டும் *
துளக்கறநாடின்வேறல்லவிளக்கொளியும் *
நெய்யற்றகண்ணேயறுமேயவரன்பும் *
கையற்றகண்ணேயறும். (௧)

அங்கோட்டகலல்குலாயிழையாணம்மொடு *
செங்கோடுபாய்துமேயென்றாண்மற் செங்கோட்டி
மேற்றீண்டின்மையான்மேவாதொழிந்தாளே [ன்
காற்கானோய்காட்டிக்கழிந்து. (௨)

அங்கண்விசும்பினமரர்தொழப்படும் *
செங்கண்மாலாயினுமாகமற்றங்கைக் *
கொடுப்பதொன்றில்லாரைக்கொய்தளிரன்னார் *
விடுப்பர்தங்கையாற்றொழுது. (௩)

ஆணமினெஞ்சத்தணிநீலக்கண்ணார்க்குக் *
காணமில்லாதார்கடுவனையர்காணவே *
செக்கூர்ந்துகொண்டானுஞ்செய்தபொருளுடையார் *
அக்காரமன்னாரவர்க்கு. (௪)

பாம்பிற்கொருதலைகாட்டியொருதலை *
தேம்படுதெண்கயத்துமீன்காட்டுமாங்கும் *
மலங்கன்னசெய்கைமகளிர்தோள்சேர்வார் *
விலங்கன்னவெள்ளறிவினார். (௫)

பொத்தநூற்கல்லும்புணர்பிரியாவன்றிலும்போல் *
நித்தலுநம்மைப்பிரியலமென்றுரைத்த [ஞ்சே
பொற்றொடியும்போர்த்தகர்க்கோடாயினாணன்னெ
நிற்றியோபோதியோநீ. (௬)

ஆமாபோனக்கியவர்கைப்பொருள்கொண்டு *
சேமாபோற்குப்புறூஉஞ்சில்லைக்கணன்னாரை *
ஏமாந்தெமென்றிருந்தார்பெறுபவே *
தாமாம்பலராநகை. (௭)

ஏமாந்தபோழ்தினினியார்போன்றின்னாராய்த் *
தாமார்ந்தபோதேதகர்க்கோடாமானோக்கின் *
தந்நெறிப்பெண்டிர்தடமுலைசேராரே *
செந்நெறிச்சேர்துமென்பார். (௮)

ஊறுசெய்நெஞ்சந்தம்முள்ளடக்கியொண்ணுதலார்
தேறமொழிந்தமொழிகேட்டுத்தேறி *
எமரென்றுகொள்வாருங்கொள்கவேயார்க்கும் *
தமரல்லர்தம்முடம்பினார். (௯)

உள்ளமொருவனுழையதாவொண்ணுதலார் *
கள்ளத்தாற்செய்யுங்கருத்தெல்லாந்தெள்ளி *
அறிந்தவிடத்துமறியாராம்பாவம் *
செறிந்தவுடம்பினவர். (௰)

பொதுமகளிர் - முற்றிற்று — ஆக ௩௱௮௰.

அரும்பெற்றகற்பினயிராணியன்ன ✻
பெரும்பெயர்ப்பெண்டிரெனினும்விரும்பிப் ✻
பெறுநசையாற்பின்னிற்பாரின்மையேபேணும் ✻
நறுநுதலாணன்மைத்துணை. (க)

குடநீரட்டுண்ணுமிடுக்கட்பொழுதும் ✻
கடனீரறவுண்ணுங்கேளிர்வரினும் ✻
கடனீர்மைகையாறக்கொள்ளுமடமொழி ✻
மாதர்மனைமாட்சியாள். (உ)

நாலாறுமாறாய்நனிசிறிதாயெப்புறனும் ✻
மேலாறுமேலுறைசோரினுமேலாய ✻
வல்லாளராய்வாழுமூர்தற்புகழுமாண்கற்பின் ✻
இல்லாளமர்ந்ததேயில். (௩)

கட்கினியாள்காதலன்காதல்வகைபுனைவாள் ✻
உட்குடையாளூர்நாணியல்பினளுட்கி ✻
இடனறிந்தூடியினிதினுணரும் ✻
மடமொழிமாதராள்பெண். (௪)

எஞ்ஞான்றுமெங்கணவரெந்தோண்மேற்சேர்ந்தெ
ழினும், அஞ்ஞான்றுகண்டேம்போனாணுதுமாலெ
ஞ்ஞான்றும், எவ்வனைசெழீஇயினர்கொல்லோபொரு
ளாசையால், பன்மார்புசேர்ந்தொழுகுவார். (ரு)

## கற்புடைமகளி

உள்ளத்துணர்வுடையானோதியநூலற்றால் ✻
வள்ளன்மைபூண்டான்கணொண்பொருடெள்ளிய ✻
ஆண்மகன்கையிலயில்வாளனைத்தரோ ✻
நாணுடையாள்பெற்றநலம்.

கருங்கொள்ளுஞ்செங்கொள்ளுந்தூணிப்பதக்கென்
றொருங்கொப்பக்கொண்டானாமூரொருங்கொவ்வா
நன்னுதலார்த்தோய்ந்தவரைமார்பனீராடா ✻
தென்னைப்புந்தோயவரும். (எ)

கொடியவைகூறாதிபாணநீகூறின் ✻
அடிபையவிட்டொதுங்கிச்சென்றுதுடியின் ✻
இடக்கண்ணனையம்யாமூரற்கதனால் ✻
வலக்கண்ணனையார்க்குரை. (அ)

சாய்ப்பறிக்கநீர்திகழுந்தண்வயலூரன்மீ ✻
தீப்பறக்கநொந்தேனும்யானேமற்றிப்பறக்கத் ✻
தாக்கிமுலைபொருததண்சாந்தணியகல ✻
நோக்கியிருந்தேனும்யான். (௯)

அரும்பவிழ்தாரினனெம்மருளனென்று ✻
பெரும்பொய்யுரையாதிபாணகரும்பின் ✻
கடைக்கண்ணனையநாமூரற்கதனால் ✻
இடைக்கண்ணனையார்க்குரை. (௰)

பொருட்பால் - முற்றிற்று — அஃ. ௩௱௯௰.

மயங்காக்காற்பாயும்பசலைமற்றாடி
உயவுகாக்காலும்பின்றூங்காமம்வயங்கோதம்
லாத்திரையலைக்குநீள்கழித்தண்சேர்ப்ப
புலப்பதோராறு (க)

தம்மமர்காதலர்தார்சூழணியகலம்
விம்மமுயங்குநர்துணையில்லார்க்கிம்மெனப்
பெய்ப்பெவழிவிழுமுழங்குந்திசையெல்லாம்
நெய்தலறைந்தன்ன நீர்த்து. (உ)

கம்மஞ்செய்மாக்கள்கருவியொடுக்கிய
மம்மர்கொண்மாலைமலராய்ந்துபூத்தொடுப்பாள்
கம்மாலையிட்டுக்கழுந்தாடுணையில்லார்க்
கிம்மாலையென்செய்வதென்று. (ங)

செல்சுடர்நோக்கிச்சிதரரிக்கண்கொண்டநீர்
மெல்விரலூழ்தெறியாவிம்மித்தன்மெல்விரலில்
நாள்வைத்துநங்குற்றமெண்ணுங்கொல்தோழிதன்
தோள்வைத்தணைமேற்கிடந்து. (ச)

கண்கயலென்னுங்கருத்தினாற்காதலி
பின்சென்றதம்மசிறுசிரல்பின்சென்றும்
ஊக்கியெழுந்தெறிகல்லாவொண்புருவம்
கோட்டியவில்வாக்கறிந்து. (ரு)

காமநுதலியல்.

காம்பஞ்ஞறும்வாயம்மருங்கிற்கன்மே
பரற்கானமாற்றினகொல்லோவரக்கார்ந்த
பஞ்சிகொண்டூட்டினும்பையெனப் பை
றஞ்சிப்பின்வாங்குமடி.

ஓலைக்கணக்கரொலியடங்குபுன்செக்கர்
மாலைப்பொழுதின்மணந்தார்பிரிவுள்ளி
மாலைபரிந்திட்டழுதாள்வனமுலைமேல்
கோலஞ்செய்சாந்தந்திமிர்ந்து.

கடக்கருங்கானத்துக்காளைபின்னாள்
நடக்கவும்வல்லளோவென்றிசடார்த்தொடு
பெற்றெடுத்தாளுவன்பெருங்குதிரையந்நிலை
கற்றாளவஃதோருமாறு.

முலைக்கண்ணுமுத்துமுழுமெய்யும்புல்லும்
இலக்கணம்யாதுமறியேன்கலைக்கணம்
வேங்கைவெரூஉநெறிசெலியபோலுமென்
பூம்பாவைசெய்தகுறி.

கண்மூன்றுடையானுங்காக்கைசெயும்பையரவு
எண்ணின்றயானும்பிழைத்ததெஃபொன்னொ
கோங்கரும்பன்னமுலையாய்பொருள்வயின்
பாங்கனோர்சென்றநெறி. (௰)

காமத்துப்பால் முற்றிற்று.

[illegible]முற்றிற்றுமுற்றும்.